T3-உயிரியல்

மாதிரி வினாத்தாள் VII

9th Standard

**அறிவியல்**

Reg.No. : 

# I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 02:00:00 Hrs

Total Marks : 70

## பகுதி - அ

15 x 1 = 15

1) தாவரசெல் ________ ஐப் பெற்றுள்ளதால் விலங்கு செல்லில் இருந்து வேறுபடுகிறது.
   (a) செல்சவ்வு (b) எண்டோபிளாச வலை (c) பிளாஸ்மா சவ்வு (d) செல்சுவர்
2) ஒட்டுண்ணித் தாவரம் ________
   (a) காளான் (b) மியூக்கர் (c) கஸ்குட்டா (d) ஈஸ்ட்
3) தாவரத்தின் தரைமேல் பாகங்களில் இருந்து நீர் இழக்கப்படுவது _______
   (a) ஒளிச்சேர்க்கை (b) நீராவிப்போக்கு (c) இனப்பெருக்கம் (d) சுவாசித்தல்
4) நீர், கனிம உப்புகளை மேல் நோக்கிக் கடத்துதலில் பங்கு பெறும் தாவரக் கடத்துத் தொகுப்பு _______ ஆகும்.
   (a) ∴புளோயம் (b) சைலம் (c) நார்கள் (d) பாரன்கைமா
5) அடர்ந்த சைட்டோபிளாசத்தையும், பெரிய உட்கருவையும் பெற்றிருக்கக்கூடிய செல்கள் ______ எனப்படும்.
   (a) எளியதிசு (b) கூட்டுத்திசு (c) ஆக்கத்திசு (d) நிலைத்ததிசு
6) தாவரத்தின் எப்பகுதி மண்ணிலிருந்து நீர், கனிமங்களை உறிஞ்ச உதவுகிறது?
   (a) வேர்த்தூவிகள் (b) வேர்கள் (c) வேர்முடி (d) ஆணி வேர்
7) இலைகளில் நடைபெறாத நிகழ்ச்சி எது?
   (a) ஒளிச்சேர்க்கை (b) சுவாசித்தல் (c) நீராவிப்போக்கு (d) கடத்துதல்
8) வேதிதற்சார்பு ஊட்ட உயிரிகளுக்கு எடுத்துக்காட்டு ______ ஆகும்.
   (a) பசும் கந்தக பாக்டீரியா (b) பேசில்லஸ் சப்டிலிஸ் (c) நைட்ரோசோமோனாஸ் பாக்டீரியா (d) ஊதா கந்தக பாக்டீரியா
9) பின்வருவனவற்றுள் கூட்டுயிரி உணவூட்ட முறை நடைபெறாத தாவரம் எது?
   (a) லைக்கன் (b) மைக்கோரைசா (c) மியூக்கர் (d) ரைசோபியம்
10) ஒளிச்சேர்க்கையின் போது
   (a) $H_2O$, $CO_2$ குறைக்கப்படுகிறது; $H_2O$, $CO_2$ ஆக்சிஜனேற்றமடைகின்றன. (b) $H_2O$ குறைக்கப்படுகிறது
   (c) $CO_2$ ஆக்சிஜனேற்றமடைகிறது; $H_2$ ஆக்சிஜனேற்றமடைகிறது (d) $CO_2$ குறைக்கப்படுகிறது
11) காற்றுச் சுவாசம் காற்றில்லா சுவாசத்துடன் வேறுபடுகிறது. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தவிர
   (a) ஆக்சிஜனின் பங்கு (b) ஆற்றல் வெளியீடு (c) இறுதி விளைப்பொருள்கள் (d) சைட்டோபிளாசத்தில் குளோகோஸ் சிதைக்கப்படுதல்
12) கல்லீரல் அழற்சி _______________ தொடர்புடையது
   (a) புகைப்பிடித்தல் (b) வலிநிவாரணி அதிக அளவு (c) உட்கொள்ளுதல் (d) குடிப்பழக்கம், போதைப் பொருள்களின் அதிக பயன்பாடு
13) பீர், ஒயின் போன்ற மதுபானங்களில் காணப்படும் போதைத்தரும் நச்சுத்தன்மை வாய்ந்த பொருள்__________
   (a) நிகோடின் (b) எத்தில் ஆல்கஹால் (c) LSD (d) ஓபியம்
14) சுண்ணாம்பினால் கட்டப்பட்ட பாரம்பரியமிக்க தாஜ்மஹால் கட்டடத்திற்கு, அருகிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் இருந்து வெளியேறும் வாயுக்களால் அரிமானம் ஏற்படுகிறது. இவ்வாயுக்களில் உள்ள முதன்மையான மாசுக்காரணி ______ ஆகும்.
   (a) CO (b) $CO_2$ (c) $SO_2$ (d) $NO_2$
15) ஓசோன் படலச் சிதைவிற்கு fhuzkhd மாசு __________ ஆகும்.
   (a) CFC's (b) MIC (c) $CO_2$ (d) $SO_2$

## பகுதி - ஆ

10 x 1 = 10

16) அடிமையாதல் என்றால் என்ன?
17) எத்தகைய மனிதர்கள் அடிமையாதலுக்கு உள்ளாகின்றனர்?
18) பொருள் சார்ந்த அடிமையாதலிலிருந்து எவ்வாறு நடத்தை சார்ந்த அடிமையாதல் வேறுபடுகிறது?
19) கல்லீரல் அழற்சி- குறிப்பு வரைக.
20) புகைப்பிடித்தல் மனிதனை எவ்வாறு பாதிக்கிறது என தொடர் நிரல் படம் வரைக.
21) பட்டாசுகளை வெடிக்கவும், ஒலிபெருக்கிகளை இரவு நேரங்களில் பயன்படுத்தவும் தடை செய்யப்பட்டு இருக்கிறது. ஒலி மாசுபடுவதினால் ஏற்படும் இரு தீய விளைவுகளைக் குறிப்பிடுக
22) மனிதனால் உண்டாக்கப்படும் மாசுக்கள் ___________ ஆகும்.
23) _______________ எலும்பு மஜ்ஜை, மண்ணீரல், நிணநீர் முடிச்சு போன்றவற்றைத் தாக்கி இரத்தப் புற்றுநோய்க்குக் காரணமாகிறது.
24) குளிரூட்டிப் பெட்டிகளில் குளிர்விப்பானாகப் பயன்படுத்தப்படும் வாயுக்கள் _____________.
25) கடல் நீரிலிருந்து உப்பைப் பிரித்துத் தூய்மையான குடிநீரைப் பெறுவதற்கு மிகச் சிறந்த முறை _________ ஆகும்.

## பகுதி - இ

15 x 2 = 30

26) உயிரினங்கள் “காற்றில்லாச் சூழ்நிலையில் சுவாசிக்க முடியும்” என்பதனை நிரூபிக்க
27) தாவரத்தில் உள்ள எவ்வகைத் திசு தாவரத்திற்கு உறுதியையும், தாங்கும் திறனையும் அளிக்கிறது?
28) சைலம் திசுவில் காணப்படும் பலவகையான செல்களைக் குறிப்பிடுக.

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in

29) மண்ணிலிருந்து நீர், கனிமங்கள் இலைகளுக்கு எவ்வாறு கடத்தப்படுகிறது என்பதனை வரைபடம் மூலம் (அம்புக்குறிகளிட்டு) குறிப்பிடுக. இதில் பங்கேற்கும் செல்களைக் குறிப்பிடுக.

30) தாவரத்தின் இலைகளில் நடைபெறும் ஒளிச்சேர்க்கையினால் உற்பத்தி செய்யக்கூடிய கரிமப்பொருள் _______ ஆகும். இந்த உணவுப்பொருள்கள் ______ திசுவினால் தாவரத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் கடத்தப்படுகிறது.

31) கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் bghJ இடங்களில் காணப்படுகிறது.

அ) பொது இடங்களில் காணப்படும் இந்த அடையாளக்குறி எதைக் குறிக்கிறது.

ஆ) புகைத்தலினால் ஏற்படும் இரண்டு நோய்களைக் கூறுக.

இ) மக்கள் மத்தியில் புகைத்தலின் தீமைகள் பற்றிய விழிப்புணர்வை நாம் எவ்வாறு ஏற்படுத்தலாம்?



32) புகைபிடிப்பதினால் தோல் தன் வளத்தன்மையை இழந்து விடுகிறது. காரணம் கூறுக.

33) படத்தை உற்றுநோக்கி கீழ்க்காண் வினாக்களுக்கு விடையளிக்க.

அ) இந்த அடையாளக் குறி எதை குறிக்கிறது.


ஆ) இப்பழக்கத்தினால் ஏற்படும் இரண்டு நோய்களை கூறுக




34) படத்தை உற்றுநோக்கி கீழ்க்காண் வினாக்களுக்கு விடையளிக்க.

i) கொடுக்கப்பட்டுள்ள படம் ‘ஆ’ படம் ‘அ’ இல் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது.

ii) வேறுபாட்டிற்கான காரணங்கள் யாவை?



அ



ஆ

35) திரு. X அவர்கள் தனது நண்பர்களுடன் ஒரு விருந்திற்குச் சென்றார். அங்கு தன்முறையாக மது அருந்தினார். படிப்படியாக அப்பழக்கத்திற்கு அடிமையானார். இதனால் அவர் தற்போது சந்திக்கும் பிரச்சனைகளை ஆராய்ந்து பட்டியலிடுக.

திரு. X ன் பிரச்சனைகள்

| வரிசை எண் | உடல் சார்ந்த | மனம் சார்ந்த | சமூகம் சார்ந்த |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

36) ஒலி மாசுபடுதலினால் ஏற்படும் தீய விளைவுகளை விளக்கும் சுவரொட்டி தயாரிக்க இரு முழக்கச் சொற்றொடர்களை (Slogan) எழுதுக.

37) ஒரு பக்கம் மரங்கள் நடுவதும், மறுபக்கம் அளவுக்கு அதிகமாக மரங்கள் வெட்டப்படுவதும் நிகழ்கின்றன. இவை இரண்டிற்கும் இடையில் எவ்வாறு சமநிலை ஏற்படுத்தலாம்?

38) எண்ணெய்க் கப்பல்களின் விபத்துகளாலும், எண்ணெய் வளங்களை ஆய்வு செய்வதாலும் கடலில் எண்ணெய்க் கசிவு அடிக்கடி ஏற்படுகின்றன. இதனால், கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்படும் விளைவுகளைப் பற்றிக் குறிப்பு வரைக.

39) பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடுத்து அதற்கான காரணத்தைக் கூறுக.

i) ரேடியம், தோரியம், யுரேனியம், சாக்கடை கழிவுகள்

ii) பென்சீன், டொலுவீன், சைலீன், அமில மழை

40) நான் யார்?

அ) நான் கோல் வடிவம் கொண்ட சாறுண்ணியான, மண்ணில் வாழும் பாக்டீரியா கரிமக்கரைப்பான்களான ஆக்டேன் மற்றும் டெலூயீனை சிதைப்பேன்.

ஆ) நான் எலும்பில் சேகரமாகி எலும்புப் புற்றுநோயை உருவாக்குவேன்.

## பகுதி - ஈ

5 x 3 = 15

41) சாறேற்றத்தை விளக்கும் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிக்கவும்.

42) நீர் மூலக்கூறுகள் அதன் செறிவு அதிகமான இடத்திலிருந்து செறிவு குறைந்த இடத்திற்கு ஒரு அரைகடத்துச் சவ்வின் மூலம் கடத்தப்படுவது சவ்வூடுபரவல் எனப்படும்.

அ) மேற்கூறிய கூற்றிலிருந்து, உயிர்ப்புக்கடத்துதலை, உயிர்ப்பற்ற கடத்துதலிலிருந்து எவ்வாறு வேறுபடுத்துவீர்கள்?

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in


43) படம் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

i) படத்தைப் பார்த்து வரைந்து ‘அ’ முதல் ‘இ’ வரை குறிக்கப்பட்டுள்ள பாகங்களைக் குறிப்பிடுக.

ii) தண்டின் நீள்போக்கு வளர்ச்சிக்குக் காரணமான பகுதி எது?


iii) இரண்டாம் நிலை வளர்ச்சிக்குக் காரணமான பகுதி யாது?

iv) கணுவிடைப் பகுதியின் நீட்சிக்குக் காரணமான பகுதியைக் குறிப்பிடுக.




44) வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரிக்கவும். “தீய பழக்கங்களில் இருந்து விடுபடுதல் எளிது ; கடினம்” என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடத்துக.

45) கீழ்க்காண் படங்களில் நிகழ்த்தப்படும் செயல்களில் வெளிப்படும் வாயுவைக் கண்ட




(அ) (ஆ) (இ) (ஈ)

அ) _________________ ஆ) _________________ இ) _________________ ஈ) _______________ உ) அமில மழையினால் உண்டாகும் வீழ்படிவு _________ மற்றும் _____________ னால் ஆன கலவை

******************************************

QUESTION BANK 365
https://www.qb365.in